[10th August 1963

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு அரசாங்கம் கருத வில்லை. பாடப்புத்தகங்கள் மூலம் சொல்லக்கூடாது என்பதையும் ஒப்புக் கொள்ளவில்லை.

மருத்துவ பரிசோதனை (மாணவர்கள்).

* 88 கேள்வி.—**திரு. கே. நாராயணசாமி பிள்ளை :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

ஆண்டுதோறும் சர்க்கார் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களை மருத்துவப் பரிசோதனை செய்ய திட்டமுண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை. மாணவர்களை ஆண்டு தோறும் மருத்துவப் பரிசோதனை செய்யும் திட்டம் எதுவும் இல்லை. எனினும் அரசாங்க உயர்நிலைப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மாணவர்களை மருத்துவப் பரிசோதனை செய்வது அவசியமெனக் கருதினால், அதற்காக அவர்களிடமிருந்து தகுந்த கட்டணம் பெற்றுக்கொண்டு மருத்துவப் பரிசோதனை நடத்து விக்கலாம். பல்கலைக் கழக ரெகுலேஷன்களின்படி, பி.யு.சி. படிக்கும் மாணவர்களுக்கும் மூன்றாண்டுப் பட்டப் படிப்பின் முதல் ஆண்டு வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கும் மருத்துவப் பரிசோதனை நடத்த வேண்டும். அவ்வாறே அரசாங்கக் கல்லூரி கள் அனைத்திலும் மருத்துவப் பரிசோதனை நடந்து வருகிறது.

No. There is no scheme for annual medical inspection of students. However, the Head masters of Government High Schools have the discretion to conduct the medical inspection of pupils, whenever necessary after levying suitable medical inspection fees. According to the University Regulations, it is necessary to conduct the medical inspection of pupils studying in the P.U.C. and the first-year class of the three-year degree course and this is being conducted in all Government colleges.

தொழிலகக் கார்ப்பரேஷன் அளித்துள்ள நிதி உதவி

* 89 கேள்வி.—**திரு. ந. ப. செங்கோட்டுவேலு :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சென்னை தொழிலக கார்ப்பரேஷன் இதுவரை எந்தெந்தத் தொழிலுக்கு எவ்வளவு பண உதவி அளித்துள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சம்பந்தமாக ஓர் அறிக்கை[a] சபைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

A statement[a] is placed on the table of the House.

திரு. நா. ப. செங்கோட்டு வேலு : ஸார், அப்படி அளிக்கப் படும் உதவிக்கு எத்தனை சதவிகிதம் வட்டி?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏழரை சதவிகிதம்.

574–576-ம் பக்கத்தில் 'இரண்டாவது இணைப்பு' ஆக அச்சிடப்பட்டிருக்கிறது.

a Printed as Appendix II on pages 574–576 infra.